# மனந்திரும்புதல் மற்றும் விசுவாசம்

மனந்திரும்பவும் விசுவாசிக்கவும் இயேசுவின் கட்டளையை கற்பிக்க உதவக்கூடிய ஒரு வெளிப்பாடு பின்வருகிறது.

## பகுதி ஒன்று
திரும்பிப் பார்ப்பது

### ஜெபம்

ஜெபத்தில் நேரத்தை ஒன்றாகத் தொடங்குங்கள்.

# பொறுப்புக்கூறல்

செய்யப்பட்ட கடமைகள் குறித்து கேள்விகளைக் கேளுங்கள். உதாரணமாக கேளுங்கள்:

- நீங்கள் தினமும் வேதாகமத்தை வாசித்தீர்களா? அல்லது வாசிக்க கேட்டீர்களா?
- தேவன் உங்களுக்குக் கற்பித்ததை நீங்கள் எவ்வாறு கடைப்பிடித்தீர்கள்?
- இந்த வாரத்தில் நீங்கள் பகிர்ந்து கொள்ள விரும்பும் ஏதேனும் ஜெப விண்ணப்பங்கள் அல்லது கதைகள் உள்ளதா?

# பகுதி இரண்டு
## மேலே பார்ப்பது

## வேத வாசிப்பு

மனந்திரும்பி, வேதத்தை ஒன்றாகப் வாசிப்பதன் மூலம் விசுவாசிப்பதற்க்கான இயேசுவின் கட்டளையைப் பற்றி கற்றுக்கொடுங்கள். இயேசு கட்டளையிட்ட ஒரு பகுதியை முதலில் படித்து, ஒரு உண்மையான கதையைப் பற்றி விவாதிக்கவும், இது கட்டளைக்குக் கீழ்ப்படிவது

எப்படி இருக்கும் என்பதை விளக்கும்.

மாற்கு 1:14-15:

> யோவான் காவலில் வைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து: "காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார்."

இயேசு தேவனுடைய ராஜ்யத்தைப் பறைசாற்றுவதன் மூலமும் கட்டளையிடுவதன் மூலமும் தன் ஊழியத்தைத் தொடங்குகிறார். இந்த கட்டளை மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசிப்பதாகும்.

லூக்கா 19:1-10:

> அவர் எரிகோவில் பிரவேசித்து, அதின் வழியாக  நடந்துபோகையில்,

ஆயக்காரருக்குத் தலைவனும் ஐசுவரியவானுமாயிருந்த சகேயு என்னப்பட்ட ஒரு மனுஷன், இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகைதேடினான். அவன் குள்ளனானபடியால், ஜனக்கூட்டத்தில் அவரைக் காணக்கூடாமல், அவர் போகும் வழியில் முன்னாக ஓடி, அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான். இயேசு அந்த இடத்தில் வந்தபோது, அண்ணாந்துபார்த்து, அவனைக் கண்டு: சகேயுவே, “நீ சீக்கிரமாய் இறங்கிவா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும் என்றார்.” அவன் சீக்கிரமாய் இறங்கி, சந்தோஷத்தோடே அவரை அழைத்துக்கொண்டு போனான். அதைக் கண்ட  யாவரும்: இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படிபோனார் என்று முறுமுறுத்தார்கள். சகேயு நின்று, கர்த்தரை நோக்கி: "ஆண்டவரே, என்

ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான்." இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே. இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்.

கதையைப் படித்த பிறகு, கதையை இந்த வழிகளில் ஒன்றில் மதிப்பாய்வு செய்யுங்கள்:

- கதையை நினைவிலிருந்து சொல்லுங்கள்.
- கதையைப் பற்றி பேசுங்கள். என்ன நடந்தது?

- கதையை மீண்டும் சொல்லுங்கள் அல்லது வாசியுங்கள்.
- கதையை விளக்கும் நாடகத்தை நடித்துகாட்டுங்கள்.
- கதையை விளக்கும் படங்களை வரைந்துகாட்டுங்கள்.

கதையை மறுபரிசீலனை செய்த பிறகு, கதையின் அடிப்படையில் பின்வரும் கேள்விகளைப் பற்றி விவாதிக்கவும்:

- தேவனைப் பற்றி நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?
- மனிதனைப் பற்றி நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?
- நாம் என்ன செய்யக்கூடாது?
- நாம் என்ன செய்ய வேண்டும்?

இந்த பொதுவான கேள்விகளைப் பற்றி விவாதித்த பிறகு, இந்த குறிப்பிட்ட கதைக்கு பின்வருபவை உதவக்கூடும்.

பின்வருவனவற்றைப் பற்றி விவாதிக்கவும்:

- “மனந்திரும்புதல்” என்றால் என்ன? "மனந்திரும்புதல்" என்பது பாவத்திலிருந்து இயேசுவை நோக்கி திரும்பி அவரைப் பின்பற்றுவதாகும்.
- “விசுவாசம்” என்றால் என்ன? "விசுவாசம்" என்பது இயேசுவை ஆண்டவராக நம்புதல், அவர்மீது நம்முடைய நம்பிக்கையை வைப்பது.
- நாம் ஏன் மனந்திரும்ப வேண்டும்? எல்லா பாவங்களுக்கும் இயேசுவில் இரட்சிப்பு தேவை. தேவைப்பட்டால், சுவிசேஷத்தை

மறுபரிசீலனை செய்ய ரோமர் 3:23, ரோமர் 6:23, ரோமர் 10:9-10 ஆகியவற்றைப் படியுங்கள்.

- யார் மனந்திரும்ப வேண்டும்? அனைவரும் மனந்திரும்ப வேண்டும். தேவைப்பட்டால், அப்போஸ்தலர் 2:38-41-ஐப் படியுங்கள்.
- “உறுதிப்பாடு” என்றால் என்ன? இயேசுவின் நற்செய்தியை விசுவாசிப்பதன் மூலம் நாம் இரட்சிக்கப்படுகிறோம், நம்முடைய இரட்சிப்பை இழக்க மாட்டோம் என்பதே உறுதிப்பாடு. 1 யோவான் 1:9, யோவான் 10:28, ரோமர் 10:9-10 ஆகியவற்றைப் படியுங்கள்.

## பயிற்சி

மனந்திரும்புங்கள், சுவிசேஷத்தை விசுவாசியுங்கள். ஒவ்வொரு நாளும் பாவத்திலிருந்து மனந்திரும்புங்கள்.

## பகுதி மூன்று

முன்னோக்கிப் பார்ப்பது

## அர்ப்பணிப்பு

கதையிலிருந்தும் இயேசுவின் கட்டளையிலிருந்தும் என்ன கீழ்ப்படிய வேண்டும் என்பதைப் பற்றி விவாதிக்கவும். அடுத்த சந்திப்புக்கு முன் கீழ்ப்படிய சில வழிகள்:

- மனந்திரும்புங்கள், தினமும் சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்.
- கதையை (லூக்கா 19:1-10) மற்றவர்களிடம் சொல்லுங்கள்.
- சகேயு, இயேசுவை அவருடன் இருப்பதன் மூலம் அனுபவித்தார். இன்று, இயேசுவைப் பற்றி நாம் கற்றுக் கொள்ளும் முதன்மை வழி வேதாகமத்தை வாசிப்பது அல்லது வாசிக்க கேட்பது. ஒவ்வொரு நாளும், வேதாகமத்தை வாசிக்கவும் அல்லது வாசிக்க கேட்கவும், இந்த ஆய்வின் நான்கு பொதுவான கேள்விகளைப் பற்றி சிந்தியுங்கள்.

# ஜெபம்

எல்லோரும் செய்த கடமைகளுக்காக ஜெபித்து, ஜெப நேரத்தை ஒன்றாக முடியுங்கள்.

**ராஜ்ய வளர்ச்சிக்கு**

© 2023 ராஜ்ய வளர்ச்சிக்கு

ராஜ்ய வளர்ச்சிக்கான கூடுதல் தகவலுக்கு, கொடுக்கப்பட்டுள்ள லின்க்கை கிளிக் செய்யவும்:

**www.forkingdomgrowth.com**

Scripture quotations are from The Holy Bible, BSI - Tamil - O.V. (New Ortho) published by The Bible Society of India. Used by permission. All rights reserved.

ராஜ்ய வளர்ச்சிக்கு இந்த பொருளுக்கு பங்களித்த அனைவருக்கும் மிக்க நன்றி. கர்த்தரில் நீங்கள் செய்த சேவை ஒருபோதும் வீணாகாது.